Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.70/19 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.6 |
| Name: | முத்துகுமார் |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 23.08.2023. | |

**எதிரி மாதவன் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை, எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை** : நேரம் :

நான் தற்போது மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சலூான் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அதை நான் சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 5.00 மணி அளவில் வசந்தம் நகர் அருகே விபத்து நடந்ததாக சொல்லி போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். தயார் செய்த பார்வை மகஜரில் நானும், முத்துகுமார் என்பவரும் கையொப்பம் செய்தோம். ( **பார்வை மகஜர் அ.சா.6/அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்ன நாள், நேரம் மற்றும் இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.70/19 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.5 |
| Name: | தங்கம் |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 23.08.2023. | |

**எதிரி மாதவன் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை, எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை** : நேரம் :

நான் தற்போது கயத்தாறு, சன்னல்புதுகுடியில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். இவ்வழக்கில் இறந்த போன ஆறுமுகம் எனது மாமா ஆவார். கடந்த 19.01.2018ம் தேதி தாயில்பட்டியில் உள்ள வங்கிக்கு சென்றிருந்த போது எனது மாமா சைக்கிளில் ரோட்டில் சென்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டு விட்டதாக தகவல் சொன்னார்கள். தாயில்பட்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கா

சேர்த்திருந்தார்கள். நான் பார்த்த போது எனது மாமா மயக்கநிலையில் இருந்தார். இடது கண்ணில் வீக்க காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் காயம்பட்ட எனது மாமாவை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துமவனைக்கு கொண்டு சென்ற போது திருமங்கலம் அருகே செல்லும் போது எனது மாமா இறந்து விட்டதாக கூறினார்கள். எனது மாமாவின் இறப்பிற்கு காரணமான குட்டி யானை வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் தெரிந்து கொள்ளவில்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கேள்விபட்டவாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.